தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 106 | 4 Pages | 14.11.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 106 | 4 பக்கங்கள் | 14.11.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை**

**விளக்கம்:**
மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ.

## பெண்ணின் திருமண வயதை 9 ஆக குறைக்க ஈராக் முடிவு: பெண்கள் அமைப்பு எதிர்ப்பு




பாக்தாத், நவ.14

மேற்காசிய நாடான ஈராக் நாடாளுமன்றத்தில், ஷியா முஸ்லீம் பழமைவாத குழுவினர் பெரும்பான்மை வகிக்கின்றனர். முகமது ஷியா அல் சுடானி பிரதமராக உள்ளார். இந்த நாட்டில் பெண்களுக்கான திருமண வயது வரம்பு 18 ஆக உள்ளது. கடந்த 1950ல் குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டாலும், 28 சதவீத பெண்கள் 18 வயதுக்கு முன்பாகவே திருமணம் செய்து கொள்வதாக 2023 ஐ.நா., ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இந்நிலையில், ஈராக்கில் பெண்ணின் திருமண வயதை 18ல் இருந்து 9 ஆக குறைக்க சட்ட திருத்தம் செய்ய அந்நாட்டு நாடாளுமன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஷியா பழமைவாத குழுவினர் பெரும்பான்மை வகிப்பதால் இந்த சட்ட திருத்தம் நிறைவேறுவதில் சிக்கல் இருக்காது என கூறப்படுகிறது.ஆனாலும், பெண்கள், மனித உரிமை குழுக்கள் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் இளம் பெண்கள் மீதான பாலியல் மற்றும் உடல் ரீதியிலான துன்புறுத்தல்கள் அதிகரிக்கும். அவர்கள் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்,பெண்களின் சொத்துரிமை, வாரிசுரிமை மற்றும் விவாகரத்து கோரும் உரிமை பறிக்கப்படும் என கவலை தெரிவித்து உள்ளனர். மேலும் ஈராக்கில் பெண்கள் குழுவினர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எனினும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து பெண்ணின் திருமண வயதில் திருத்தங்கள் செய்துள்ள இந்த மசோதாவை சட்டமாக இயற்றும் முயற்சிகளில் ஈராக் அரசு ஈடுபட்டு வருகிறது.

## சீனா: உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தவர்கள் மீது மோதிய கார் 35 பேர் பலி



பீஜிங், நவ.14

சீனாவின் கவ்ங்டங் மாகாணம் குஹாய் நகரில் விளையாட்டு அரங்கம் உள்ளது. இந்த விளையாட்டு அரங்கத்திற்கு வெளியே இன்று மாலை 7.30 மணியளவில் (அந்நாட்டு நேரப்படி) 70க்கும் மேற்பட்டோர் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தனர்.

அப்போது, அந்த விளையாட்டு அரங்கம் அருகே கார் வேகமாக வந்தது. அங்கு உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தவர்கள் மீது கார் வேகமாக மோதியது.

இந்த சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 35 பேர் உடல்நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 43 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டிச்சென்ற 62 வயதான பென் என்ற நபரையும் போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது கோமா நிலையில் உள்ளதாகவும் அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

விவாகரத்தால் சொத்து பங்கீட்டின்போது ஏற்பட்ட திருப்தியின்மை காரணமாக பென் தனது காரை உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

சீன விமானப்படை சார்பில் நாளை பிரமாண்ட விமான சாகச நிகழ்ச்சி குஹாய் நகரில் நடைபெற உள்ள நிலையில் இச்சம்பவம் அந்நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தாய்லாந்து: பிறப்புறுப்பில் ஊசி... 18 ஆண்டுகளாக தீராத வலியை அனுபவிக்கும் பெண்

பாங்காக், நவ.14

தாய்லாந்து நாட்டில் நரத்திவாத் மாகாணத்தில் வசித்து வரும் பெண்ணுக்கு பல வருடங்களாக வயிற்றின் அடிப்பகுதியில் வலி இருந்து வந்துள்ளது. இதுபற்றி தி இன்டிபென்டன்ட் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், அந்த பெண்ணுக்கு பிரசவம் நடந்தபோது தவறுதலாக அறுவை சிகிச்சை செய்யும் ஊசி ஒன்றை மருத்துவ பணியாளர், பெண்ணின் பிறப்புறுப்பில் தவறுதலாக விட்டு விட்டார்.

பிரசவத்திற்கு பின்பு தையல் போடும்போது நடந்த இந்த சம்பவத்தில், அந்த ஊசியை எடுக்கும் முயற்சியில் டாக்டர் ஈடுபட்டிருக்கிறார். அந்த ஊசி இருக்கும் இடம் பற்றி அறிந்து கொள்ள, விரல்களால் தொடர்ந்து முயன்றிருக்கிறார். ஆனால், அதில் பலன் ஏற்படவில்லை. இதனால், ரத்த இழப்பு அதிகரிக்கும் என அச்சமடைந்து, ஊசியை வெளியே எடுக்காமலேயே தையலை போடுவது என்ற முடிவுக்கு வந்துள்ளார் என அந்த செய்தி தெரிவிக்கின்றது.

அந்த பெண்ணுக்கு வயது 36. 18 ஆண்டுகளுக்கு முன் நர்ஸ் ஒருவர் தவறுதலாக, விட்ட அந்த ஊசி அந்த பெண்ணுக்கு தினமும் தீராத வலியை ஏற்படுத்தி உள்ளது. இதன் தொடர்ச்சியாக, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பவினா அறக்கட்டளையை அவர் தொடர்பு கொண்டிருக்கிறார். கடந்த ஆண்டு எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில், ஊசி இருப்பது உறுதியானது.

இதனால், சாங்கிலா மாகாணத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள போகும்படி உள்ளூர் மருத்துவமனையை சேர்ந்த டாக்டர்கள் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால், தொடர்ந்து ஊசி இருக்கும் இடம் மாறி கொண்டே இருந்துள்ளது. இதனால், அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திட்டத்தில் சிக்கல் ஏற்பட்டது.

இந்த சூழலில், மாதத்திற்கு 4 முறை தொடர்ந்து மருத்துவமனைக்கு அவர் சென்று வந்துள்ளார். ஏழையாக உள்ள அவருக்கு உதவும் வகையில் பவினா அறக்கட்டளை முன்வந்துள்ளது. அதன் தலைவர் பவீனா ஹாங்சகுல், அரசு மருத்துவமனையை தொடர்பு கொண்டு, தேவையான சிகிச்சையை அந்த பெண் பெறுவதற்கு வேண்டிய உதவிகளை செய்திருக்கிறார்.

இந்த சம்பவம் பற்றி அறிந்ததும், ஆன்லைனில் கண்டனங்கள் குவிந்தன. அந்த டாக்டருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் 18 ஆண்டு கால வேதனைக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் சிலர் தெரிவித்தனர். அந்த பெண்ணின் கணவருக்காக நான் வருத்தப்படுகிறேன் என்று ஒருவர் தெரிவித்து உள்ளார். இந்த விவகாரத்தில், மருத்துவமனை சார்பில் பெண்ணுக்கு இழப்பீடு எதுவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்ற விவரங்கள் வெளிவரவில்லை.

# தமிழக அரசு சார்பில் வள்ளுவர் சிலை வெள்ளிவிழா கொண்டாடப்படும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.14

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை கடந்த 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதி அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார். இந்த சிலை நிறுவி 25 ஆண்டுகள் நிறைவு பெறும் வெள்ளி விழா அடுத்த மாதம் நடைபெற உள்ளது.

இதையடுத்து, தமிழக அரசு சார்பில் வள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நடத்தப்பட உள்ளது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள வீடியோவில் கூறுகையில், டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு அரசு சார்பில் வள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாடப்படும்.



சுனாமி பேரலையின் போதும் கம்பீரமாக உயர்ந்து நின்றார் திருவள்ளுவர்.

இதுதொடர்பாக டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் பல்வேறு போட்டிகள் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு இருசக்கர வாகன பழுதுபார்ப்போர் முன்னேற்ற சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில நிர்வாகத் தேர்தல்

திருப்பூர், நவ.14

தமிழ்நாடு இருசக்கர வாகன பழுதுபார்ப்போர் முன்னேற்ற சங்கங்களின் கூட்டமைப்பு பதிவு எண் 459/2002 மாநில நிர்வாகத் தேர்தல் கடந்த 10 11 2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் திருப்பூர் காந்திநகர் ரோட்டரி கிளப் மண்டபத்தில் முதன்மை தேர்தல் அதிகாரி K. காளீஸ்வரன் B.A., B.L., திருப்பூர். தேர்தல் நடத்தும் அதிகாரி R. R. ரவிச்சந்திரன் B. B. M., B. L., வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக் மற்றும் கூட்டமைப்பின் தேர்தல் அதிகாரிகள் மயிலாடுதுறை S. பகவதி குமார் திருச்சி K. ரகுராமன் ஆத்தூர் R. நீதிமான் குன்னத்தூர் A. நாகராஜ் கன்னியாகுமரி S. நீலகண்டன் திருப்பூர் G.ஆனந்த் இவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு முழுவதும் உள்ள இருசக்கர வாகன பழுதுபார்ப்போர் முன்னேற்ற சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாநில நிர்வாகத் தேர்தல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் வந்து பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் ஓட்டு எடுப்பின் மூலம் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புஞ்சைபுளியம்பட்டியைச் சேர்ந்த R. குழந்தை வேலு மாநிலத் தலைவராகவும், தர்மபுரியைச் சேர்ந்த P. சண்முகம் மாநிலச் செயலாளராகவும், சேலத்தைச் சேர்ந்த N. திருநாவுக்கரசு மாநில பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியின் முக்கியத்துவம் இந்தப் பதவிகள் மூன்றும் இருசக்கர வாகன சேவை துறையின் வளர்ச்சி மற்றும் சங்க உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்ற R. குழந்தை வேலு அன்னிய நாட்டு நிறுவனங்களின் கடும் போட்டி மற்றும் தற்சமயம் உள்ள நுகர்வோர் தேவைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப தொழில் முனைவோரை ஊக்குவிக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வழிகளை அமைப்பதில் முனைப்புடன் செயல்படப்போவதாக உறுதியளித்தார்.

மாநிலச் செயலாளர் P. சண்முகம் சங்கத்தின் நிர்வாக மற்றும் அனைத்து உறுப்பினர்களின் ஒற்றுமையைப் பேணுவதில் முக்கிய பங்காற்றி, தொழில்நுட்ப பயிற்சிகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளதாகக் கூறினார்.

N. திருநாவுக்கரசு, மாநில பொருளாளராக, நிதி மேலாண்மையில் புதிய முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தி, சங்கத்தின் நிதி நிலையை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருப்பதாக அறிவித்தார்.

நிகழ்வில் பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள் தமிழகம் முழுவதிலுமிருந்து சங்கத்தின் அனைத்து மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பல முக்கிய உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். தொழில் துறையின் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, வேலைவாய்ப்பு பயிற்சிகள், தொழில்நுட்ப மாற்றங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற முக்கிய விவாதங்கள் நடத்தப்பட்டன.



உண்மை! உழைப்பு!! உயர்வு!!!

**தமிழ்நாடு இருசக்கர வாகனபழுதுபார்ப்போர் முன்னேற்ற சங்கங்களின் கூட்டமைப்பு**

TNECVPMS, KOOTAMAIPPU.
நெ.38, மாடல் ஸ்கூல் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை – 600 006.
பதிவு எண் : 459/2002

**வாக்களிக்க அழைப்பிதழ்**

தேர்தல் நாள் 10.11.2024

அன்புடையீர்
நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஐப்பசி மாதம்
24 ஆம் தேதி ( 10.11.2024 ) ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை
நமது கூட்டமைப்பின் தலைமை நிர்வாகிகளுக்கான தேர்தல்
நடைபெற இருப்பதால் வாக்காளர் அனைவரும் கலந்து கொண்டு
வாக்களித்து விழாவினை சிறப்பித்து தருமாறு அன்போடு அழைக்கிறோம்

SCAN FOR GET LOCATION

மேலும் தொடர்புக்கு
98948 47918

நடைபெறும் நாள் : 10.11.2024
நடைபெறும் இடம் : காந்திநகர் ரோட்டரி சங்கம், அவிநாசி ரோடு, காந்திநகர், திருப்பூர் மாவட்டம்.
மாநில சட்ட ஆலோசகர்
S.ஜெயக்குமார் B.Com., B.L., விழுப்புரம்
முதன்மை தேர்தல் அதிகாரி
K.காளீஸ்வரன் B.A., B.L., திருப்பூர்
தேர்தல் நடத்தும் அதிகாரி
R.R.ரவீச்சந்திரன் B.B.M., B.L., திருப்பூர்
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்

(குறிப்பு) சந்தா செலுத்திய சங்கங்களுக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்படும்.

தேர்தல் அதிகாரிகள்

| மயிலாடுதுறை | திருச்சி | ஆத்தூர் | குன்னத்தூர் | கன்னியாகுமரி | திருப்பூர் |
|---|---|---|---|---|---|
| S.பகவதி குமார் | K.ரகுராமன் | R.நீதிமான் | A.நாகராஜ் | S.நீலகண்டன் | G.ஆனந்த் |

அனைவரையும் வருக வருக என வரவேற்கும்
திருப்பூர் மாவட்ட அவிநாசி சாலை இரு சக்கர வாகன பழுது பார்ப்போர் நலசங்கம்

# ஓசூரில் 2 போலி பெண் டாக்டர்கள் கைது கிளினிக், மருந்தகத்திற்கும் 'சீல்' வைப்பு

ஓசூர், நவ.14

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியை சேர்ந்தவர் கவுரி (34). இவர், ஓசூர் அரசனட்டி பகுதியில் தங்கி இருந்து கிளினிக், லேப் மற்றும் மருந்தகம் ஆகியவற்றை நடத்தி வந்தார். டிபார்ம், பி.இ.எம்.எஸ். வரை மட்டுமே படித்த இவர், அப்பகுதி மக்களுக்கு ஆங்கில மருத்துவம் பார்த்து வந்தார்.

அதே போல் இவரது கிளினிக்கில் வேலை பார்த்து வந்த ஓசூர் மூக்கண்டப்பள்ளியை சேர்ந்த சிலம்பரசி 10ம் வகுப்பு வரை மட்டுமே படித்து விட்டு அவரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்ததாக தெரிகிறது.

இதுதொடர்பாக அந்த பகுதி மக்கள் முதலமைச்சரின்தனிப்பிரிவுக்குபுகார் அளித்துள்ளனர். தொடர்ந்து ஓசூர் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் ஞானமீனாட்சி, ஓசூர் சரக மருந்து கட்டுப்பாட்டு ஆய்வாளர் ராஜீவ் காந்தி ஆகியோர் தலைமையிலானமருத்துவகுழுவினர், ஓசூர் சிப்காட் போலீசார் நேற்று மூக்கண்டப்பள்ளி அரசனட்டி பகுதிக்கு சென்று கவுரி நடத்தி வந்த கிளினிக்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் கவுரியும், சிலம்பரசியும் போலி டாக்டர்கள்என்பதுதெரிய வந்தது. இதையடுத்து மருத்துவத்துறையினர் அளித்த புகாரின் பேரில் 2 பேரையும் ஓசூர் சிப்காட் போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து கவுரி நடத்தி வந்த கிளினிக் மற்றும் லேப், மருந்தகம் ஆகியவற்றை மருத்துவ குழுவினர் சீல் வைத்து நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# ஏ2பி உணவக கிச்சனில் பயங்கர தீ விபத்து



சென்னை, நவ. 14

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள அடையாறு ஆனந்த பவனுக்கு சொந்தமான உணவு தயாரிப்பு கூடத்தில் பயங்கரதீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சமையல் கூடத்தில் புகைப்போக்கில் ஏற்பட்ட தீ சமையல் கூடம் முழுவதும் பரவி உள்ளது.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அம்பத்தூர் சமையல் கூடத்தில் தயாரிக்கப்படும் உணவுகள் சென்னை நகர் முழுவதும் அனுப்பி வைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.20 லட்சம் பீடி இலைகள் பறிமுதல் படகில் தப்பிச் சென்றவர்கள் குறித்து போலீசார் விசாரணை

தூத்துக்குடி, நவ.14

தூத்துக்குடி கடற்கரை பகுதி வழியாக இலங்கைக்கு தொடர்ந்து பீடி இலைகள், மஞ்சள், பூச்சி மருந்து, அழகுப்பொருட்கள், கடல் அட்டை, போதை பொருட்கள் உள்ளிட்டவை கடத்தப்படுவது வாடிக்கையாக உள்ளது. இதை தடுக்கும் வகையில் 'கியூ' பிரிவு போலீசார், கடலோர காவல் குழும போலீசார் மற்றும் சுங்க இலாகாவினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினம் கடற்கரை வழியாக பீடி இலைகள் இலங்கைக்கு கடத்தப்படுவதாக கியூ பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து 'கியூ' பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதா தலைமையில் சப் இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி தர்மராஜ், செல்வகுமார், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்கள் கீதன், ராமர், தலைமை காவலர் இருதய ராஜ்குமார், குமார், இசக்கிமுத்து மற்றும் பழனி முருகன் உள்ளிட்ட போலீசார் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பில்ஈடுபட்டுகொண்டிருந்தனர்.

அப்போது குலசேகரப்பட்டினம் வடக்கூர் கடற்கரையில் இருந்த படகில் மூட்டைகளை ஏற்றி கொண்டிருந்ததை கண்ட கியூ பிரிவு போலீசார்அங்கு விரைந்து சென்றனர். போலீசாரை கண்டதும் அங்கிருந்த பண்டல்களையும், இரு சக்கர வாகனங்களையும் விட்டு விட்டு கடத்தலில் ஈடுபட்டவர்கள் படகு மூலம் தப்பி சென்றனர்.

இதைத்தொடர்ந்து, கடற்கரையில் இருந்த ரூ.20லட்சம்மதிப்பிலான 636கிலோஎடைகொண்ட 21 பீடி இலை மூட்டைகளையும் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய 3 இருசக்கர வாகனங்களையும்கியூபிரிவுபோலீசார்பறிமுதல்செய்துதப்பி ஓடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 6 முதல் 12ம் வகுப்பு வரை அனைத்து தேர்வுகளிலும் திருக்குறள் வினாக்கள் கட்டாயம்: தமிழக அரசு




மதுரை, நவ.14

மதுரையை சேர்ந்த ராம்குமார் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் பொதுநல மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அதில் கூறியிருப்பதாவது:

2016ம் ஆண்டு உயர்நீதிமன்றம் திருக்குறளில் உள்ள அறத்துப்பால் மற்றும் பொருட்பால் அதிகாரங்களில் உள்ள திருக்குறள்களை 6ம் வகுப்புமுதல்12ம்வகுப்பு வரையில் முழுமையாக பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் 2017ம் ஆண்டு தமிழக அரசு அரசாணை ஒன்றை வெளியிட்டு 1050 திருக்குறள்களை 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரைபாடத்திட்டத்தில் சேர்க்க அரசாணை வெளியிட்டது. ஆனால் இந்த உத்தரவு பெயரளவிலேயே உள்ளது.

எனவே 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டத்தில் திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலின் 1050 திருக்குறள்களை இடம் பெறச்செய்ய உத்தரவிட வேண்டும். இது தேர்விலும் கேள்விகளாக இடம் பெற உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், மரியகிளாட் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில், அனைத்து வகுப்புகளுக்கும் திருக்குறள் பாடமாக்கப்பட்டுள்ளது.

திருக்குறள், அதன் பொருள் விளக்கம் போன்ற அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. தேர்வுகளிலும் வினாக்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

# கோவை அருகே மகளை விபசாரத்தில் தள்ளிய பெண், 2வது கணவருடன் கைது

சூலூர், நவ.14

சூலூர்அருகேஉள்ளகருமத்தம்பட்டி கிருஷ்ணாபுரம் பகுதியில் ஒரு வீட்டை ஒரு குடும்பத்தினர் வாடகைக்கு எடுத்து இருந்தனர். எப்போதும் அவர்கள் அந்த வீட்டில் தங்கியிருப்பது இல்லை. சுற்றுலாவுக்கு வருவது போல் அவ்வப்போது அந்த வீட்டுக்கு வந்து சென்றனர்.

அப்படி வரும்போதும் பெண்களுடன் புது, புது ஆண்கள் வந்து சென்றனர். இதனால் அக்கம்பக்கத்தினருக்குஅவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டது. இது பற்றி அவர்கள் கருமத்தம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவத்தன்று அந்த வீட்டில் ஆட்கள் நடமாட்டம் இருப்பதாக பொதுமக்கள் தகவல் தெரிவிக்கவே போலீசார் அதிரடியாகச் சென்று சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு விபசாரம் நடப்பது தெரியவந்தது. அங்கு 2 பெண்கள் இருந்தனர். அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் தாயும், மகளும் என தெரிவித்தனர். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் தொடர்ந்து விசாரித்தனர்.

இவர்கள் சூலூர் அருகே உள்ள ராசிபாளையத்தில் வசித்து வந்துள்ளனர். தாயாருக்கு 42 வயதாகிறது. கணவரை பிரிந்த அவர் வேறு ஒருவரை 2வது திருமணம் செய்து கொண்டு வசித்து வந்தார். அந்த பெண்ணுக்கு முதல் கணவர் மூலம் ஒரு மகள் இருக்கிறார். அவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர்.

இந்தநிலையில் கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மகள், தனது கணவரை பிரிந்து தாயாரின் தயவை தேடி வந்தார். தாயார், அவரது 2வது கணவர் மற்றும் குழந்தைகளுடன் வந்த மகள் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். அப்போது கணவரை பிரிந்து வந்த மகளை விபசாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கலாம் என அவரது தாயாரிடம் 2வது கணவர் ஆசை வார்த்தை கூறி உள்ளார். பணத்துக்கு ஆசைப்பட்டு தாயாரும் தனது மகளை விபசாரத்தில் தள்ளினார்.

ஊரில் யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக கருமத்தம்பட்டி கிருஷ்ணாபுரத்தில் வாடகை வீடு எடுத்து அங்கு விபசார தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 2வது கணவர் புரோக்கராக இருந்து ஆள்பிடித்து வந்துள்ளார். அப்படி வாடிக்கையாளர் யாராவது சிக்கினால் தாயுக்கும், மகளுக்கும் தகவல் தெரிவித்து அவர்களை கிருஷ்ணாபுரம் வீட்டுக்கு வரச் செய்வாராம். அங்கு குடும்ப பெண்கள் போல் தாயும், மகளும் சென்றுள்ளனர். பின்னர் அந்த வீட்டில் மகளை அந்த பெண் விபசாரத்தில் தள்ளியுள்ளார். அதில் அதிக பணம் கிடைக்கவே அதனையே அவர்கள் தொழிலாக மாற்றி செய்து வந்துள்ளனர்.

தற்போது அக்கம் பக்கத்தினர் புகாரால் போலீசில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களில் தாயாரையும், அவரது 2வது கணவரையும் போலீசார் கைது செய்தனர். விபசாரத்தில் தள்ளப்பட்ட பெண்ணை போலீசார் மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பு தவெக வண்ணத்தில் மேஜையின் போர்வை அதிரடி மாற்றம்



சென்னை, நவ.14

தமிழ்நாடு சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் இன்று காலை பல்லடம் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது நோயாளிகளிடம் மருத்துவமனையில் உள்ள வசதிகள் குறித்தும், அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்குமாறும், அவர்களிடம் கனிவாக நடந்து கொள்ளும் படியும் டாக்டர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து, கோவையில் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களை சந்திப்பதாக கூறப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. அப்போது மேஜையில் தமிழக வெற்றிக்கழகத்தின் வண்ணத்திலான போர்வை போர்த்தப்பட்டு இருந்தது.

இதனை அடுத்து அப்போர்வை அகற்றப்பட்டு மாற்று போர்வை மேஜை மீது போர்த்தப்பட்டது. இதுதொடர்பானவீடியோ காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 திருட்டு வழக்குகளில் தொடர்புடைய 5 பேர் கைது

புதுக்கோட்டை, நவ.14

புதுக்கோட்டைமாவட்டம் திருமயம், நமண சமுத்திரம் மற்றும் அரிமளம் பகுதிகளில் நடைபெற்ற 11 திருட்டு வழக்குகளில் தொடா்புடைய 5 பேரை தனிப்படையினா் கைது செய்து, அவா்களிடமிருந்து தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகளைப் பறிமுதல் செய்துள்ளனா்.

புதுக்கோட்டைமாவட்டம் பொன்னமராவதி உட்கோட்டம் திருமயம், நமணசமுத்திரம் மற்றும் அரிமளம் பகுதிகளில் நடைபெற்ற 11 நகை திருட்டு வழக்குகளில் குற்றவாளிகளைக் கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டு புலன் விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணையில், அறந்தாங்கி எல்என்புரத்தைச் சோ்ந்த கோவிந்தராஜ் மகன் தேவா (வயது58), சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கீழத்தெரு மீனாட்சி சுந்தரம் மகன் ஹரிஹரன் (44), ஆவுடையார்கோவில் முண்டகவயல் சமத்துவபுரத்தைச் சோ்ந்த சுப்பையா மகன் வெங்கடேஷ் (26), அறந்தாங்கி பூவைமாநகா் அலஞ்சரக்காடு கணபதி மகன் சொக்கலிங்கம் (54), கீரமங்கலம் வேப்பங்குடி மேற்கு செட்டித் தெருவைச் சோ்ந்த துரைராஜ் மகன் தங்கபாண்டியன் (46) ஆகிய 5 பேரையும் தனிப்படையினா் கைது செய்தனா்.

இவா்களிடமிருந்து 100 கிராம் எடை கொண்ட தங்கக் கட்டி, 5.750 கிலோ எடை கொண்ட வெள்ளிக் கட்டிகள், ரொக்கம்ரூ.1,500, 2 கைப்பேசிகள், இரண்டு இரு சக்கர வாகனங்கள், இரு நான்கு சக்கர வாகனங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட 5 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனா். குற்றவாளிகளைக் கைது செய்த தனிப்படையினரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளா் வந்திதா பாண்டே நேரில் அழைத்துப் பாராட்டினார்.

# மதுரையில் பஸ்சுக்காக காத்திருந்த சென்னை போலீஸ்காரரை கத்தியால் குத்தியவர் கைது

மதுரை, நவ. 14

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி பகுதியைச் சேர்ந்தவர் ராஜ்குமார் (வயது31).இவர்சென்னை அமைந்தகரை போலீஸ் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறார். வாரம் ஒருமுறை சொந்த ஊருக்கு அவர் வந்து செல்வது வழக்கம். இந்த நிலையில் நேற்று மாலை பணி முடிந்து சொந்த ஊர் செல்வதற்காக மதுரை வந்த ராஜ்குமார், இரவில் மதுரை மண்டேலா நகர் சந்திப்பு பகுதியில் காரியாபட்டி பஸ்சுக்காகபேருந்து நிறுத்தத்தில்நின்றுகொண்டிருந்தார். அப்போது அந்த பகுதியில் பயணிகள் கூட்டம் குறைவாகவே இருந்தது. இதற்கிடையே மதுரைசோளங்குரணி பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் (39) என்பவர் தனது காரில் மண்டேலாநகர்பகுதியில் உள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பி விட்டு வெளியே வந்தார். அப்போது ஆறுமுகத்திற்கும் பெட்ரோல் பங்க் அருகே பேருந்துக்காக நின்று கொண்டிருந்த காவலர் ராஜ்குமாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு உள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆறுமுகம் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் போலீஸ்காரர் ராஜ்குமாரை சரமாரியாக குத்தியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த ராஜ்குமாரை அந்த வழியாக வந்தவர்கள் மீட்டு அருகில் உள்ள தனி யார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். ராஜ்குமார் கொடுத்த புகார் பெயரில் அவனியாபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் லிங்கபாண்டி வழக்கு பதிவு செய்து ஆறுமுகத்தை கைது செய்தார்.

# 11 மீனவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவு



புதுக்கோட்டை, நவ.14

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 15 மீனவர்களை எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படை கைது செய்தது. அதனை தொடர்ந்த அவர்களை சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில், இன்று ஊர்க்காவல் நீதிமன்றத்தில் 15 மீனவர்களும் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது 11 மீனவர்களுக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனைவிதித்து நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

11 மீனவர்கள் 2வது முறையாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதால் சிறை தண்டனை விதிப்பதாகவும் புதிதாக கைதான 4 மீனவர்கள் நிபந்தனையுடன் விடுதலை செய்வதாகவும் நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்தார்.

# கருணாநிதி, ஜெயலலிதாவை விட விஜய் பெரிய தலைவரா? சீமான்



கன்னியாகுமரி, நவ.14

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

என்னை தலைவனாக தேர்வு செய்கிற, என்னை நேசிக்கின்ற, என்னை பின்தொடர்கிற, எனக்கு வாக்கு செலுத்துகின்ற என் மக்கள் யார் என்று பாருங்கள்.

என்னை விரும்புகின்ற மக்கள் பொழுதுபோக்கு தளத்தில் தலைவர்களை தேடியவர்கள் அல்ல. போராட்ட களத்தில் தலைவனை தேடுகின்ற மக்கள் தான் என்னை பின் தொடருவார்கள்.

காற்று அடிக்கும் திசையெல்லாம் பறக்கும் பதர்கள் எனக்கு வாக்களிக்க மாட்டார்கள். புயலே அடித்தாலும் நகராமல் அதே இடத்தில் இருக்கும் நெல்மணிகள் எதுவோ அவர்கள் எனக்கு வாக்களிப்பார்கள்.

ஜெயலலிதா, கருணாநிதி இருக்கும்போது கட்சி ஆரம்பித்தவன் நான். அவர்கள் இருவரை விட இவர் பெரியவரா? அவர்கள் இருவரை விட இவருக்கு பெரிய கூட்டம் வந்ததா?

கார்த்தி சிதம்பரம் சீமானை வாக்கு வங்கி என்கிறார்.

எனக்காவது வாக்கு வங்கியில் தான் குறையும். உங்களுக்கு வாக்கே கிடையாது.

நானும் கார்த்தி சிதம்பரமும் ஒரே ஊர். நாம் இருவரும் போட்டியிடுவோம். கூட்டணி வைக்கக்கூடாது. யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்.

ஆனால் ஓட்டுக்கு காசு கொடுக்கக்கூடாது. யாருக்கு வாக்கு வங்கி இருக்கிறது என்று அப்போது தெரியும்.

நீங்கள் அத்தனை கட்சி கூட்டணி வைத்தீர்கள். நான் கூட்டணி வைக்க மாட்டேன். ஒன்றரை லட்சத்திற்கும் மேல் நான் வாக்குவாங்கி உள்ளேன். ஒத்த ரூபா காசு கொடுக்காமல், புது வேட்பாளரை நிறுத்தி, வாக்கு பெற்றேன். யாரு பெரிய கட்சி.

2026க்கு சரியாக ஒரு ஆண்டு தான் உள்ளது. தேர்தல் முடிந்து வாக்கு எண்ணும்போது நான் எவ்வளவு ஏறி வந்துள்ளேன். எவ்வளவு தூரம் தொட்டுள்ளேன் என்பதை பார்க்கப்போகிறீர்கள்.

என் கட்சியில் இருந்து விலகிப்போன உறுப்பினர் அட்டையை காட்டுங்கள். உன் கட்சிக்காரனை உட்கார வைத்துக்கொண்டு நாம் தமிழர் கட்சியில் இருந்து வந்தார்கள் என்று சொன்னால் எப்படி?

என் கட்சியில் இருக்கும் எல்லோரும் ஒரு கட்சியின் குடும்பத்தின் பிள்ளைகள் தான்.

என்னை பேசாமல் தூக்கம் வராது. என்னை பேசாமல் சோறு கிடைக்காது.

திட்டி திட்டி பேசினாலும் வட்டியில சோறு வைப்பா என்று அய்யா இளையராஜா அம்மா பற்றி பாடிய பாட்டு உள்ளது.

அதுபோல் என்னை திட்டி திட்டி பேசினாலும் நான் வட்டியில சோறு வைக்கிறேன் பல பேருக்கு. போ நல்லா இரு என்று கூறினார்.

# பலத்த மழையால் சிக்னல் கோளாறு தென் மாவட்ட ரெயில்கள் தாமதம்



சூலூர், நவ.14

சூலூர்அருகேஉள்ளகருமத்தம்பட்டி கிருஷ்ணாபுரம் பகுதியில் ஒருவீட்டை ஒரு குடும்பத்தினர் வாடகைக்கு எடுத்து இருந்தனர். எப்போதும் அவர்கள் அந்த வீட்டில் தங்கியிருப்பது இல்லை. சுற்றுலாவுக்கு வருவது போல் அவ்வப்போது அந்த வீட்டுக்கு வந்து சென்றனர்.

அப்படி வரும்போதும் பெண்களுடன் புது, புது ஆண்கள் வந்து சென்றனர். இதனால் அக்கம்பக்கத்தினருக்குஅவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டது. இது பற்றி அவர்கள் கருமத்தம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவத்தன்று அந்த வீட்டில் ஆட்கள் நடமாட்டம் இருப்பதாக பொதுமக்கள் தகவல் தெரிவிக்கவே போலீசார் அதிரடியாகச் சென்று சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு விபசாரம் நடப்பது தெரியவந்தது. அங்கு 2 பெண்கள் இருந்தனர். அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள்தாயும், மகளும் என தெரிவித்தனர். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் தொடர்ந்து விசாரித்தனர். இவர்கள் சூலூர் அருகே உள்ள ராசிபாளையத்தில் வசித்து வந்துள்ளனர்.

தாயாருக்கு 42 வயதாகிறது. கணவரை பிரிந்த அவர் வேறு ஒருவரை 2வது திருமணம் செய்து கொண்டு வசித்து வந்தார். அந்த பெண்ணுக்கு முதல் கணவர் மூலம் ஒரு மகள் இருக்கிறார். அவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மகள், தனது கணவரை பிரிந்து தாயாரின் தயவை தேடி வந்தார். தாயார், அவரது 2வது கணவர் மற்றும் குழந்தைகளுடன் வந்த மகள் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். அப்போது கணவரை பிரிந்து வந்த மகளை விபசாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கலாம் என அவரது தாயாரிடம் 2வது கணவர் ஆசை வார்த்தை கூறி உள்ளார். பணத்துக்கு ஆசைப்பட்டு தாயாரும் தனது மகளை விபசாரத்தில் தள்ளினார்.

ஊரில் யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக கருமத்தம்பட்டி கிருஷ்ணாபுரத்தில் வாடகை வீடு எடுத்து அங்கு விபசார தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 2வது கணவர் புரோக்கராக இருந்து ஆள்பிடித்து வந்துள்ளார். அப்படி வாடிக்கையாளர் யாராவது சிக்கினால் தாயுக்கும், மகளுக்கும் தகவல் தெரிவித்து அவர்களை கிருஷ்ணாபுரம் வீட்டுக்கு வரச்செய்வாராம். அங்கு குடும்ப பெண்கள் போல் தாயும், மகளும் சென்றுள்ளனர். பின்னர் அந்த வீட்டில் மகளை அந்த பெண் விபசாரத்தில் தள்ளியுள்ளார். அதில் அதிக பணம் கிடைக்கவே அதனையே அவர்கள் தொழிலை மாற்றி செய்து வந்துள்ளனர்.

தற்போது அக்கம்பக்கத்தினர் புகாரால் போலீசில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களில் தாயாரையும், அவரது 2வது கணவரையும் போலீசார் கைது செய்தனர். விபசாரத்தில் தள்ளப்பட்ட பெண்ணை போலீசார் மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

# பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடம் முதல்வர் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



திருப்பூர், நவ.13

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்தினை திறந்து வைத்த நிகழ்ச்சியில் பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகியோர் பங்கேற்றார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்தார்கள்.

இக்கட்டடம் 86,976.00 சதுர அடி பரப்பளவில் பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய குடியிருப்பு வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. இரண்டு தளங்களை கொண்ட இக்கட்டடம் தரை தளத்தில் ஒன்றியக்குழுத்தலைவர் அறை, ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, ஒன்றியக்குழு கூட்ட அரங்கு, அலுவலக அரங்கு, தணிக்கை அலுவலர் அறை, கணிணி அறை, பதிவேடுகள் அறை, இருப்பறை, கழிப்பறை வளாகமும், முதல் தளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, பொறியியல் பிரிவு, பயிற்சிக் கூட்டரங்கு, அலுவலக அரங்கு, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை, கணினி அறை, கழிப்பறை வளாகம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் குமார், பொங்கலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயகுமார், ஜோதி, உதவி பொறியாளர்கள் இளங்கோ, ரங்கசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# கோவில் பூசாரி தற்கொலை விவகாரம் ஓ.பி.எஸ்.தம்பி மீதான வழக்கில் தீர்ப்பு





திண்டுக்கல், நவ.14

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள டி.கள்ளிப்பட்டியைச் சேர்ந்த சுப்பராஜ் மகன் நாகமுத்து (வயது 22). இவர் கைலாசபட்டியில் உள்ள கைலாசநாதர் கோவில் பூசாரியாக இருந்து வந்தார்.

கோவிலில் கடை ஒதுக்குவது தொடர்பாக இவருக்கும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் தம்பியுமான ஓ.ராஜாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2012ம் ஆண்டு டிசம்பர் 7ந்தேதி நாகமுத்து தற்கொலை செய்து கொண்டார். இவரை தற்கொலைக்கு தூண்டியதாக கோவில் அறங்காவலராகவும், பெரியகுளம் முன்னாள் நகர்மன்ற தலைவராகவும் இருந்த ஓ.ராஜா, தென்கரை பேரூராட்சி முன்னாள் தலைவர் பாண்டி உள்பட 7 பேர்மீது பெரியகுளம் தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவுப்படி கடந்த 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்த வழக்கு திண்டுக்கல் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வழக்கு விசாரணை நடைபெற்றபோதே பாண்டி என்பவர் இறந்து விட்டார். மற்ற 6 பேர் மீதான வழக்கு விசாரணை தற்போது திண்டுக்கல் மாவட்ட பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.


இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஓ.ராஜா, மணிமாறன், சிவக்குமார், ஞானம், லோகு, சரவணன் ஆகியோர் நிபந்தனையற்ற ஜாமின் பெற்று இருப்பதால் அங்கு வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகி வருகின்றனர்.

இந்த வழக்கில் 23 சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். 4 தடயங்கள், சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பின் இறுதி கட்ட வாதத்துக்காக ஒத்திவைக்கப்பட்டு இருந்த இந்த வழக்கு விசாரணையின் போது 3 பேர் மட்டும் நீதிபதி முரளிதரன் முன்பு ஆஜராகினர்.

அப்போது ஓ.ராஜா உள்பட 3 பேர் ஆஜராகாத நிலையில் இறுதி கட்ட விசாரணை முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பை நாளை (13ந்தேதி) வழங்குவதாக நீதிபதி உத்தரவிட்டார். எனவே நாளை குற்றம் சாட்டப்பட்ட ஓ.ராஜா உள்பட அனைவரும் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

# முதுகுளத்தூரில் வட்ட காவல் ஆய்வாளர் நிலையம் மற்றும் சோதனைச்சாவடி திறப்பு



முதுகுளத்தூர்,நவ.13

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் மற்றும் காக்கூர் அருகே உள்ள பெரியார் சமத்துவபுரத்தில் சோதனைச்சாவடியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் திறந்து வைத்தார்.இந்நிகழ்ச்சியில் முதுகுளத்தூர் காவல் ஆய்வாளர் கிங்ஸ்லி தேவ் ஆனந்த், முதுகுளத்தூர் சார்பு ஆய்வாளர்கள் சக்திவேல், சுரேஷ் மற்றும் தனிப்பிரிவு காவலர்கள் முனீஸ்வரன், மாடசாமி மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கடலூரில் விபத்தில் சிக்கிய காருக்குள் குட்கா பொருட்கள் பறிமுதல்: போலீஸ் விசாரணை



கடலூர், நவ.14

உளுந்தூர்பேட்டை பைபாஸ் சாலையில் இருந்துகடலூர்மாவட்டம் பண்ருட்டி நோக்கி அதிவேகமாக வந்த கார் ஒன்று, திருவாமூர் என்ற இடத்தில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்து வந்த வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் படுகாயம் அடைந்த நிலையில், இருவர் தப்பி ஓடி விட்டனர். டிரைவர் படுகாயங்களுடன் காரில் சிக்கி கொண்டார்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர், நீண்ட போராட்டத்திற்கு பிறகு டிரைவரை மீட்டனர். அப்போது அந்த காருக்குள் குட்கா பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, காயமடைந்த டிரைவரை மருத்துவமனையில் அனுமதித்த போலீசார், காருக்குள் இருந்த குட்கா பொருட்களை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மிளகாயை சாப்பிட வைத்து துன்புறுத்தல்: வார்டன் சித்ரவதை செய்வதாக மாணவிகள் கலெக்டரிடம் புகார்

மேலசொக்கநாதபுரம், நவ.13

தேனி அருகே கோட்டூரில் ஆதிதிராவிடர் நல மாணவிகள் விடுதி அமைந்துள்ளது. இந்த விடுதியில் சுமார் 60க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கி கோட்டூர்அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வருகின்றனர். இந்நிலையில் இந்த விடுதியை சேர்ந்த மாணவிகள் தங்களது வார்டன் தங்களை அடித்து துன்புறுத்துவதாக தேனி மாவட்ட கலெக்டரிடம் புகார் மனுவை அளித்துள்ளனர். விடுதியில் வார்டனாக இருக்கக்கூடிய சசிரேகாமற்றும்சமையலாளர் மாலதி ஆகிய இருவரும் விடுதியில் தங்கி பயிலும் மாணவிகளை அடித்து துன்புறுத்தி விடுதியில் உள்ள அனைத்து வேலைகளையும் மாணவிகளை வைத்தே மேற்கொண்டு வருவதாகவும், தரமற்ற உணவுகளை கொடுப்பதாகவும், இது குறித்து வெளியில் யாரிடமும் சொன்னால் தங்களை அடித்து துன்புறுத்துவதாக மாணவிகள் 3 பேர் தேனி மாவட்ட கலெக்டரிடம் புகார் மனுவை அளித்துள்ளனர். மேலும் விடுதியை சேர்ந்த மாணவிக்கு வாயில் பச்சை மிளகாய் வைத்து சாப்பிட சொல்லி துன்புறுத்தியதாகவும், இதனால் மாணவி ஒருவர் மயக்கம் அடைந்து சிகிச்சை பெற்றதாகவும் கூறினர். விடுதி வார்டன் மற்றும் சமையல் அலுவலர் மீது மாணவிகள் கூறிய புகார் குறித்து விசாரணை நடத்துமாறு பெற்றோர்களும் வலியுறுத்தி உள்ளனர்.

# சென்னையில் பெண் வெட்டிப்படுகொலை





சென்னை, நவ.14

சென்னையில் உள்ள திருவொற்றியூர் சன்னதி தெருவை சேர்ந்தவர் மாரி (55), இவருடைய மனைவி கவுரி (வயது 50). இவர்கள் இருவரும் அதே பகுதியில் சாலையில் காய்கறிகள் விற்பனை செய்யும் கடை நடத்தி வந்தனர். இந்த நிலையில் இன்று மாலை இவரது கடைக்கு வந்த நபர் ஒருவர்,தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கணவன், மனைவி இருவரையும் சரமாரியாக வெட்டியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த கவுரி, சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். மேலும் மாரிக்கு தலை மற்றும் கையில் வெட்டு காயம் ஏற்பட்டது. இதனை கண்ட அக்கம்பக்கத்தினர் கொலை செய்த நபரை பிடித்து வைத்து கொண்டு, திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் கவுரியின் உடலை பிரேதப் பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் வெட்டு காயமடைந்த மாரியை சிகிச்சைக்காக அருகில் இருந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனையடுத்து போலீசார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் கவுரியையும், மாரியையும் வெட்டிய நபர் அதே பகுதியை சேர்ந்த சேகர் (52) என்பது தெரியவந்துள்ளது.

இவர் அப்பகுதியில் ரிக்ஷா ஓட்டும் வேலை பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில் கவுரிக்கு, சேகருக்கும் ஏற்கனவே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது கவுரி சேகரை தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரத்தில் இருந்த சேகர் கவுரியை சரமாரியாக வெட்டியுள்ளார். மேலும் இதனையடுத்து வந்த அவரது கணவரையும் தலை மற்றும் கையில் வெட்டியது போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சேகரை கைது செய்த போலீசார், கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்ற கோணத்தில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சன்னதி தெருவில் நடந்த இந்தக் கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 14, 15ந்தேதிகளில் சார் பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன்கள்



சென்னை, நவ.14

சுபமுகூர்த்த தினங்களான நவம்பர் 14 மற்றும் 15ந்தேதிகளில் சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன்கள் வழங்கவணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் இன்று (12.11.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான அனைத்துதுணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பதிவுத்துறையில் கடந்த 20232024 நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்கள் (அக்டோபர் மாதம் வரை) வருவாய் ரூ.10,511 கோடி. நிகழும் 2024 2025 நிதி ஆண்டில் முதல் ஏழு மாதங்கள் (அக்டோபர் மாதம் வரை) வருவாய்ரூ.11,733 கோடி. கடந்த நிதி ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இந்த நிதி ஆண்டின் அக்டோபர் மாதம் வரை கூடுதலாக ரூ.1,222 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

ஐப்பசி மாதத்தின் சுபமுகூர்த்த தினங்களான வருகிற 14.11.2024(வியாழன்) மற்றும் 15.11.2024(வெள்ளி) ஆகிய தினங்களில் ஒரு சார் பதிவாளர் உள்ள அலுவலகங்களில் 100க்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களில் 200க்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்களும், அதிக அளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களில் 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களும், ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்களும் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக வழங்கிட அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி, பதிவு செய்த ஆவணங்களை அதே நாளிலே திருப்பி ஒப்படைத்தல் (களப்பணி மேற்கொள்ள வேண்டிய ஆவணங்கள் தவிர்த்து), ஆவணங்கள் பதிவு செய்தவுடன் தன்னிச்சையாக இணையவழி பட்டா மாற்றம் செய்வதை தெரிவு செய்தல், வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்டப்பட்ட நகல்கள் இணைய வழியில் விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக அவர்களின் உள்நுழைவிற்கே இணையதளம் வழி அனுப்பி வைத்தல், நிலுவை ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்த விவரங்கள், தணிக்கை பிரிவு அலுவலர்களின் பணிகள், முக்கிய பதிவேடுகளை பராமரித்து கண்காணித்தல், உள்ளிட்ட பணிகளின் விவரங்களை கேட்டறிந்து, அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் உடனுக்குடன் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறைதலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி



# சென்னையில் 28ம் தேதி தொழில் முனைவோருக்கான டெண்டர் வழிமுறை பயிற்சி

சென்னை, நவ.14

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில், தொழில் முனைவோருக்கான டெண்டர் வழிமுறைகள் (GeM) தொடர்பான பயிற்சி சென்னையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு வளாகத்தில் 28.11.2024 அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் 18 வயதுக்கு மேற்பட்ட (ஆண்/பெண்) குறைந்தபட்சகல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சியாளர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்) விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியின் போது தலைப்புகள் கற்றுத்தருபவை அறிமுகம், பொது கொள்முதல் செயல்முறை, விற்பனையாளர்களுக்கான நன்மைகள், விற்பனையாளர்களுக்கான செயல்முறை, கொள்முதல் முறைகள், ஏல நடைமுறை மற்றும் ஏலத்தில் பங்கேற்பு நடைமுறை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இந்த பயிற்சிக்கு முன்பதிவு கட்டாயம். மேலும், பங்குபெறும் ஆண், பெண் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை 9080609808 /9677152265 / 9841693060 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். மேலும் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலகச் சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்ற முகவரிக்கு சென்று தொடர்பு கொள்ளலாம். இப்பயிற்சியில் கலந்து கொள்ளுபவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உடன்குடி: மாணவிகளுக்கு பாலியல் தொல்லை பள்ளி முதல்வர் கைது

தூத்துக்குடி, நவ.14

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் சல்மா என்ற பெயரில் தனியார் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக உடன்குடி பகுதியைச் சேர்ந்த பொன்சிங் பணியாற்றி வந்தார். கடந்த மாதம் 22ந் தேதி தூத்துக்குடியில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக பள்ளி மாணவ மாணவிகளை உடற்கல்வி ஆசிரியர் பொன்சிங் அழைத்து சென்றார்.

அங்கு முதல் நாள் போட்டி முடியாததால் மறுநாள் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மாணவ மாணவிகள், உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர் இரவில் தூத்துக்குடியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கினார்கள். அப்போது, பொன்சிங், மாணவிகள் சிலரிடம் மது குடியுங்கள் என்று வற்புறுத்தியும், ஆபாசமாக இரட்டை அர்த்தத்தில் பேசி பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் நேற்று விஸ்வரூபம் எடுத்தது. அதாவது, பாதிக்கப்பட்ட மாணவிகள் தங்களது பெற்றோரிடம் இதுதொடர்பாக கூறினார்கள். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் தங்களது உறவினர்களுடன் பள்ளிக்கு திரண்டு வந்து முற்றுகையிட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த குழந்தைகள் நல அலுவலர் அலெக்ஸ், தனியார்பள்ளிகளின்மாவட்ட கல்வி அதிகாரி சிதம்பரநாதன், திருச்செந்தூர் உதவி போலீஸ் சூப்பிரண்டு வசந்தராஜ், தாசில்தார் பாலசுந்தரம், குலசேகரன்பட்டினம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர். அவர்கள் பள்ளி நிர்வாகம், பெற்றோரிடம்



பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மாணவிகளிடமும் விசாரணை மேற்கொண்டனர்.

பள்ளி நிர்வாகம் சார்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியரை வேலையில் இருந்து நீக்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக துணை சூப்பிரண்டிடம், பெற்றோர்கள் புகார் செய்தனர். அதன்பேரில் திருச்செந்தூர் அனைத்து மகளிர் போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே, கோவையில் பதுங்கி இருந்த உடற்கல்வி ஆசிரியர்பொன்சிங்கை போலீசார் நேற்று இரவில் கைது செய்தனர். அவரை திருச்செந்தூருக்கு அழைத்து வந்தனர். அவரிடம் விசாரணை நடத்திய பிறகே இந்த சம்பவத்தில் அவர் மட்டும் ஈடுபட்டாரா? அல்லது வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், உடன்குடியில் பள்ளி மாணவிகளுக்கு உடற்கல்வி ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் சுவீட்லி, செயலாளர் செய்யது அகமது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடம் திருச்செந்தூர் மகளிர் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்: போலீசாருடன் தள்ளுமுள்ளு

ராமேசுவரம், நவ.14

ராமேசுவரத்தில்இருந்து கடந்த 9ந் தேதி 3 விசைப் படகுகளில் 23 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றிருந்தனர். அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 23 மீனவர்களையும் நடுக்கடலில்சிறைபிடித்து கைது செய்தனர். அதோடு 3 படகுகளையும் பறிமுதல் செய்தனர். 23 பேரிடமும் தீவிர விசாரணை நடத்தினர். இதையடுத்து 23 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் நேற்று யாழ்ப்பாணம் ஊர்க்காவல்துறை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி, 23 மீனவர்களையும் வருகிற 25ந்தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதை தொடர்ந்து 23 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.



இந்த நிலையில், பருத்தித்துறை அருகே எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது. மேலும் ஒரு விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்களை இலங்கையின் காங்கேசன் துறை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு மீனவர்களிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அடுத்தடுத்துமீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள சம்பவம் ராமேசுவரம் மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் மீனவர்கள் கைதை கண்டித்து பாம்பன் சாலை பாலத்தில் விசைப்படகு மீனவர்கள் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக விடுவிக்கக்கோரி மீனவர்கள் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தியதால் மீனவர்கள், போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

# இளம்பெண்ணை கள்ளக்காதலனுடன் வீட்டுக்குள் வைத்து பூட்டிய நபர்... அடுத்து நடந்த விபரீதம்

தேனி, நவ.14

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள அய்யம்பட்டியை சேர்ந்தவர் கருப்பையா. கூலித்தொழிலாளி. அவருடைய மனைவி அவனிகா. இவர்களுக்கு, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு குழந்தை இல்லை.

அவனிகாவின் உறவினரான ராம்குமார் என்பவருடன் கருப்பையா கேரளாவுக்குதினமும் வேலைக்கு சென்று வந்தனர். இதனால் கருப்பையா வீட்டுக்கு ராம்குமார் அடிக்கடி சென்று வந்தார். இதனால் ராம்குமாருக்கும், அவனிகாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலானது. இந்த விவகாரம் கருப்பையாவுக்கு தெரியவரவே, அவர்கள் 2 பேரையும் கண்டித்தார். இருப்பினும் இவர்களது கள்ளக்காதல் தொடர்ந்ததாக கூறப்படுகிறது.

சம்பவத்தன்று இரவு அவனிகா வீட்டுக்கு ராம்குமார் சென்றார். அவர்கள் 2 பேரும் தனிமையில் இருந்தனர். இதனைக் கண்ட அப்பகுதியை சேர்ந்த ஒருவர் வீட்டின் கதவு தாழ்ப்பாளை வெளிப்புறமாக பூட்டினார். இதனை அறிந்த 2 பேரும் அதிர்ச்சி அடைந்து கதவை திறக்க சொல்லியும் அவர் திறக்கவில்லை.

மேலும் அந்த நபர், இது குறித்து அக்கம்பக்கத்தினரிடம் தகவல் தெரிவித்தார். இதனையடுத்து பொதுமக்கள் வீட்டின் முன்பு குவிந்தனர். இதற்கிடையே வீட்டுக்குள் சிக்கிய அவனிகா, ராம்குமாரை மாடியில் உள்ள அறையில் பரணுக்குள் ஒளிந்து கொள்ளுமாறு கூறினார். இதைத்தொடர்ந்து ராம்குமார் மாடிக்கு சென்று விட்டார்.

அதேநேரத்தில் ராம்குமார் உடனான கள்ளக்காதல் ஊர் மக்கள் அனைவருக்கும் தெரிந்து விட்டதே என்று அவனிகா மனம் உடைந்து அவமானம் தாங்க முடியாமல் வீட்டில் உள்ள ஒரு அறையில் அவர் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதையடுத்து நீண்ட நேரத்துக்கு பிறகு கதவை திறந்து பொதுமக்கள் வீட்டுக்குள் சென்றனர். அப்போது வீட்டுக்குள் அவனிகா தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இந்த சம்பவம் குறித்து சின்னமனூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அவனிகாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# தளபதி 69 படத்தில் கேமியோ ரோலில் சிவராஜ் குமார்



தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் விஜய். வெங்கட் பிரபு இயக்கத்தில்விஜய்நடிப்பில்வெளியான"திகோட்"திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்கும் படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 69' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில்பிரகாஷ்ராஜ், பிரியாமணி, கவுதம் வாசுதேவ் மேனன், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, நரேன் ஆகியோர் நடிக்கவுள்ளனர்.

இந்தப் படம் விஜய் நடிக்கும் கடைசி படம் என கூறி வருகின்றனர். இப்படத்தை எச்.வினோத் இயக்கி வருகிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படம் அடுத்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாகவுள்ளது. பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் தமிழில் தயாரிக்கும் முதல் படம் இதுவாகும். 'அனிமல்' படத்தில் வில்லனாக நடித்து அசத்திய பாபி தியோல் இப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார்.

இந்த நிலையில், கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ் குமார் 'தளபதி 69' படத்தில் கேமியோ ரோலில் நடிக்க உள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக படக்குழுவினர் நேரில் சந்தித்ததாக சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கன்னட நடிகர் சிவராஜ் குமார் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பேசிய நடிகர் சிவராஜ்குமார், "விஜய் நடிக்கும் அடுத்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்தித்தில் நடிக்க கேட்டிருக்கிறார்கள். எனது தேதிகள் சார்ந்த விஷயங்களால் இது எப்படி முடியும் என்பது தெரியவில்லை. ஆனால், நடிகர் விஜய் நல்ல மனிதர், சிறப்பான நடிகர். சினிமா மற்றும் அரசியல் சார்ந்த அவரின் முடிவு அற்புதமானது. இவை இரண்டையும் நான் மதிக்கிறேன்," என்று தெரிவித்தார்.

# 'வா வாத்தியார்' படத்தின் டீசர் அப்டேட்




தமிழ்சினிமாவின்முன்னணிநடிகர்களில்ஒருவர்கார்த்தி. இவர்இயக்குனர் பிரேம் குமார் இயக்கத்தின் 'மெய்யழகன்' படத்தில் நடித்திருந்தார். தற்போது பி.எஸ். மித்ரன் இயக்கத்தில் சர்தார் 2 திரைப்படத்திலும் நடித்து வருகிறார் கார்த்தி. இவர் அடுத்ததாக 'சூது கவ்வும்', 'காதலும் கடந்து போகும்' உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் நலன் குமாரசாமி இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார். கார்த்தியின் 26வது படமான இந்த படத்திற்கு வா வாத்தியார் என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. படத்தில் நடிகர் கார்த்தி எம்ஜிஆர் ரசிகனாக நடிக்கிறார். இந்த படத்தை ஸ்டூடியோ கிரேட் நிறுவனம் தயாரிக்க சந்தோஷ் நாராயணன் இதற்கு இசை அமைக்கிறார்.சத்யராஜ் இப்படத்தில் வில்லனாக நடித்துள்ளார். மேலும் நடிகர் ராஜ் கிரண் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தை பொங்கல் வெளியீடாக அடுத்தாண்டு ஜனவரி மாதம் திரைக்குக் கொண்டு வர உள்ளதாகப் படத்தின் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா தெரிவித்துள்ளார். இந்தநிலையில், 'வா வாத்தியார்' படத்தின் டீசர் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகுமென படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. 'வா வாத்தியார்' படத்தின் டீசரை வரும் 14 ம் தேதி கங்குவா வெளியாகும் திரையரங்களில் வெளியிட தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# 'டாக்ஸிக்' படக்குழு மீது வழக்குப்பதிவு




நடிகர் யாஷ், பிரசாந்த் நீல் இயக்கத்தில் வெளியான கே.ஜி.எப் 1, கே.ஜி.எப் 2 உள்ளிட்ட படங்களின் மூலம் இந்திய அளவில் பிரபலமானவர். இந்த படம் வெளியாகி அனைத்து ரசிகர்களையும் கவர்ந்து வசூலையும் வாரி குவித்தது. அதை தொடர்ந்துயாஷ்தனது 19வதுதிரைப்படத்தில்தற்போதுநடித்து வருகிறார். டாக்ஸிக் படத்தை பிரபல நடிகையும் இயக்குனருமான கீது மோகன் தாஸ் இயக்குகிறார். கீது மோகன் தாஸ் தமிழில் மாதவன் நடிப்பில் வெளியான நளதமயந்தி திரைப்படத்தில் நடித்துள்ளார். இயக்குநர் கீது மோகன்தாஸ் லையர்ஸ் டைஸ், மூத்தோன் படங்களை இயக்கி பாராட்டுக்களைப் பெற்றவர். குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான கீது மோகன்தாஸ் , தமிழில் என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு படத்தில் குழந்தை கதாபாத்திரத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

படத்தில் கியாரா அத்வானி நடிக்கிறார். ஹுமா குரேஷி, நயன்தாரா உட்பட பலர் நடிக்கின்றனர். இதன் படப்பிடிப்பு கர்நாடகாவில் பிரம்மாண்ட செட் அமைத்து நடந்து வருகிறது. ஏற்கனவே இந்த படம் தொடர்பான அறிவிப்பு வெளியாகி படப்பிடிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் கேவிஎன் புரோடக்சன்ஸ் இப்படத்தை தயாரிக்கிறது.

கர்நாடகா பகுதிகளில் இந்த படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தான் கர்நாடக வனத்துறையினர் டாக்ஸிக் படக்குழுவினர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். கர்நாடக சுற்றுலாத்துறை அமைச்சர் ஈஸ்வர் கன்ட்ரே பீன்யாவில் ஆய்வு செய்தபோது நூறுக்கும் மேற்பட்ட மரங்கள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டிருந்தது சாட்டிலைட் படங்கள் மூலம் தெரிய வந்திருக்கிறது. எனவே அனுமதி பெறாமல் மரங்களை திட்டியதற்காக டாக்ஸிக் படக்குழு மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த படம் அடுத்த ஆண்டு ஏப்ரல் 10ம் தேதி திரைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. நடிகர் யாஷ் ராமாயாணா எனும் திரைப்படத்தில் ராவணனாக நடித்து வருகிறார்.

# ஜப்பான் பேட்மிண்டன்: முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட இந்திய ஜோடி



குமாமோட்டோ மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஜப்பானில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா தரப்பில் பி.வி. சிந்து, லக்ஷயா சென் உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

தொடக்கநாளான இன்று நடைபெற்ற பெண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் திரிஷா ஜாலி காயத்ரி கோபிசந்த் ஜோடி, சீனதைபேயியின் ஹூயின் ஹூய்லின் ஜிக் யுன் உடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் இந்திய ஜோடி 16-21, 16-21 என்ற நேர்செட்டில் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறியது.

# 2016ம் ஆண்டிலேயே பெங்களூரு அணியை கோப்பையை வென்றிருக்க வேண்டும்.. ஆனால் கே.எல்.ராகுல்



இந்த வருடம் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் பெங்களூரு அணி 4வது இடம் பிடித்தது. 2008 முதல் தொடர்ந்து விளையாடி வரும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி இதுவரை ஒரு முறை கூட ஐபிஎல் கோப்பையை வென்றதில்லை. இத்தனைக்கும் அந்த அணிக்கு ராகுல் டிராவிட், அனில் கும்ப்ளே, டேனியல் வெட்டோரி, விராட் கோலி போன்ற ஜாம்பவான்கள் கேப்டனாக செயல்பட்டனர்.

அவர்களது தலைமையில் கிறிஸ் கெயில், ஏபி டி வில்லியர்ஸ், ஷேன் வாட்சன் போன்ற நிறைய மகத்தான வீரர்கள் விளையாடினர். ஆனால் ஒருமுறை கூட கோப்பையை வெல்லவில்லை. அந்த அணியின் இந்த தோல்விக்கு பல வல்லுனர்களும் பல்வேறு கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக கடந்த 2016 ஐ.பி.எல். தொடரில் விராட் கோலி தலைமையில் பெங்களூரு அட்டகாசமாக விளையாடி இறுதிப்போட்டிக்கு சென்றது. குறிப்பாக விராட் கோலி மட்டும் அந்த சீசனில் 973 ரன்கள் குவித்து தன்னுடைய அணியை இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்றார். அப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் 208 ரன்கள் குவித்தது. பின்னர் சேசிங் செய்த பெங்களூரு அணிக்கு கிறிஸ் கெயில் 76, விராட் கோலி 54 ரன்கள் விளாசி 114 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து வெற்றிப் பாதைக்கு அழைத்து வந்தனர்.

ஆனால் அவர்களுக்குப் பின் வந்த ராகுல், ஏபி டி வில்லியர்ஸ், ஷேன் வாட்சன் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் பெரிய ரன்கள் எடுத்த தவறினார்கள். அதனால் வெறும் 8 ரன்கள் வித்தியாசத்தில் பரிதாபமாக தோற்ற பெங்களூரு கிரிக்கெட் அணி இதுவரை முதல் கோப்பையை வெல்ல முடியாமல் தடுமாறி வருகிறது.

இந்நிலையில் அந்தத் தோல்வி பற்றி கேஎல் ராகுல் சமீபத்திய பேட்டியில் பேசியது பின்வருமாறு: "2016 ஐபிஎல் இறுதிப்போட்டி பற்றி நானும் விராட் கோலி பலமுறை பேசுகிறோம். எங்கள் இருவரில் ஒருவர் இன்னும் கொஞ்ச நேரம் அதிகமாக விளையாடிருந்தால் நாங்கள் கோப்பையை வென்றிருப்போம். அந்த வருடத்தில் நாங்கள் மிகவும் ஸ்பெஷலான செயல்பாடுகளை வெளிப்படுத்தினோம்.

அதனால் சின்னசாமி மைதானத்தில் கோப்பையை வென்று கதையை மகிழ்ச்சியாக முடித்திருப்போம். ஆனால் துரதிஷ்டவசமாக அது நடைபெறவில்லை. 2016 சீசனில் பெங்களூரு அணியில் என்னுடைய நேரத்தை மகிழ்ச்சியுடன் செலவிட்டேன். பெங்களூரு என்னுடைய சொந்த ஊர்" என்று கூறினார்.

# மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி: இந்திய அணி 2வது வெற்றி



8வது மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நடப்பு சாம்பியன் இந்தியா, ஜப்பான், தென் கொரியா சீனா, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் இந்திய அணி தனது முதலாவது ஆட்டத்தில் மலேசியாவை வீழ்த்தியது. இதனையடுத்து இந்தியா தனது 2வது ஆட்டத்தில் தென் கொரியாவுடன் மோதியது.

சம பலத்துடன் இரு அணிகளும் மல்லுக்கட்டியதால் ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது. முடிவில் இந்திய அணி 32 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவை வீழ்த்தி 2வது வெற்றியை பதிவு செய்தது. இந்தியா தரப்பில் தீபிகா 2 கோல்களும், சங்கீதா குமாரி ஒரு கோலும் அடித்தனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.